# DEPOSITION OF WITNESS

## In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC . 51 /2018.** | | |
| **PW/DW/CW** | : | **PW4** | | |
| **Name** | : . முத்துசாமி | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : . அரசன் | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

(Accused present)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.03.2023

---

**முதல் விசாரணை:**

1. நான் உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சம்பவம் நடந்த இடத்திற்கு எதிரே ரோட்டின்மேல் எனது வீடு உள்ளது. ஜூலை மாதம் 2017ம் ஆண்டு ஒருநாள் காலை 09:00 - 10:00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது பஸ் மோதிய டமார் என்று சத்தம்கேட்டு வீட்டில் இருந்து இறங்கி ஓடிவந்து பார்த்தேன். மேற்கிலிருந்து கிழக்காக வந்த அரசு பேருந்து சைக்கிளில் சென்ற நபர் மீது மோதி அவர் கீழே கிடந்தார். பேருந்து அங்கே நின்றிருந்தது. கீழே விழுந்தநபருக்கு தலையில் அடிபட்டு இருந்தார். சம்பவயிடத்திலேயே இறந்துவிட்டார். அங்கே கூட்டம் கூடிவிட்டது. அங்கிருந்தவர்கள் 108க்கு தகவல் சொன்னார்கள். போலீசாரும் சம்பவயிடத்திற்கு வந்துவிட்டார்கள். அன்றையதினம் பேருந்தை ஓட்டிவந்தநபர் பெயர் முத்துசரவணன் என்று சொன்னார்கள்.

2. சம்பவயிடத்தில் செந்தில்குமார் சலூான் கடையில் இருந்தநபர்கள் அனைவரும் அங்கு வந்துவிட்டார்கள். செந்தில்குமாரும் இருந்தார். பேருந்து வலதுபுறம் ஏறிவந்திருந்தது. வலதுபக்கம் தான் அவர் அடிபட்டு கிடந்தார். **அசா.ஆ.1** புகாரில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். மருத்துவமனையில் வைத்து கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

**3.** சத்தம்கேட்டு சம்பவயிடத்திற்கு நான் சென்றபோது போலீசார் அங்கு இல்லை, அதன்பின்பு வந்தார்கள். இறந்தவர் வீடு விபத்து ஏற்பட்ட கிழமேல் ரோட்டிற்கு வடக்கே உள்ளது. இறந்தவர் எனக்கு சித்தப்பா உறவுமுறை ஆகும். விபத்து ஏற்பட்ட சாலையில் தென்புறத்தில் வரிசையாக கடைகள் உள்ளன என்றால் சரிதான். நாடார் பள்ளிக்கு தென்புறத்தில் காளியம்மன் கோவிலும் தெருவும் உள்ளது. நான் கிழமேல் சாலையின் வடக்குபக்கம் உள்ள விநாயகர் கோவில் அருகே குடியிருந்து வருகிறேன். எனது வீடு மேற்குசெல்லும் தெருவில் முதல்வீடு மேற்கு பார்த்து வாசல் உள்ளது. வேலு காப்பிகடைக்கு எதிர்புறம் சற்று மேற்கே விபத்து நடந்தது. என் வீட்டில் இருந்து தெற்கே வந்தா அடைக்களம் பாத்திரக்கடையும் மற்றொரு கடையும் உள்ளது. நான் இருக்கும் தெரு கோஸ்ராவுத்தர் தெரு. அந்த தெருவில் தான் இறந்தவர் வடக்கு கடைசியில் குடியிருந்தார்.

4. எனது வீட்டில் இருந்து விபத்து நடந்த இடம் 50 அல்லது 60 மீ தூரம் இருக்கும். நான் சத்தம்கேட்டு சம்பவயிடத்திற்கு வந்து பார்த்தபோது விபத்தில் இறந்தவர் ரோட்டிற்கு நடுவே கிடந்தார். பேருந்தின் முன்பாக சைக்கிள் விழுந்து கிடந்தது. நான் சென்று பார்த்தபோது சுமார் 10 நபர்கள் அந்த இடத்தில் கூடியிருந்தார்கள். நான் குறுக்கு விசாரணையில் சொன்ன விபரத்தை தான் நான் அன்றையதினம் பார்த்தேன் என்றால் சரிதான். 5 நிமிடத்தில் விபத்து சத்தம்கேட்டு சம்பவயிடத்திற்கு வந்துவிட்டேன். இழப்பீடு கேட்டு வழக்கு போட்டுள்ளார்கள். இறந்தவர் எனக்கு சித்தப்பா என்பதால் உண்மை சம்பவத்தை மாற்றி அவருக்கு இழப்பீடு கிடைப்பதற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.d./ Muthusamy

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.